முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 793**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**30.11.2021**, செவ்வாவாய்கிழமை

1. ஓம் என்ற சக்திகொண்ட ஞானகுருவே
ஓங்காரக்குடில் படைத்த தேவகுருவே
ஆம் என்று உன்னை சரணடைந்தவர்க்கு
அழியாமை தருகின்ற என் அவதார சூட்சும குருவே
2. குரு அரங்கனே ஆறுமுக ஞானியே
குவலயத்தை காக்க வந்த மாதவசியே
மாறுதலை செய்வேன் என மாதவத்தை
மக்களை நோக்கி மாதர்மமாக ஆக்கி அருளும் அரங்கனே
3. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 14ம் நாள், 30.11.2021 செவ்வாய்கிழமை)
வரமென என்சக்தி கூடி
வள்ளலாய் நீ மகா ஜோதி சூட்சுமம் தாங்கி
4. தாங்கியே கலியுகத்தில் உன் ஞான வழிபாட்டை
காக்கும் சக்தியாக மாற்றிவர
வருகின்ற அரங்கன் உன் தயவை
வரமாக பெற்ற மக்களுக்கே
5. தருகின்றேன் அழியாமை என்கின்ற சக்தியை
தண்டாயுதன் என் மகா சூட்சுமமாக
ஆகவே அரங்கா முருகா என
அனுதினம் ஜெபதபம் செய்பவர்க்கு
6. யுகத்தில் உலகமாற்றம் செய்யும் பங்கில்
உயர்வான வாய்ப்பு தந்து அருளுகின்றேன்
அருளவே இந்த ஜெபதபங்கள்
அகிலமெங்கும் ஞான சக்தியாக
7. மகிழவே மக்களுள் நிலைத்தன்மை காண
மண்ணுலகே ஞானலோகமாக மாற்றம் பெறும்
மாற்றம் தரவந்த மாதவசி
மக்களை மீட்க வந்த மகா யோகி
8. ஆற்றல்கூட்டி என் அதீதவரம் மூலம்
அகிலத்தை ஞானவழிக்கு அற்புதம் நடத்திவர
வருகின்ற அரங்கன் தொடர்பே வையகத்தை மாற்றும்
தருகின்ற அரங்கன் தர்மமே தரணியோர்க்கு பாதுகாப்பு கூட்டும்
தாமுரைத்த ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–